# குழித்துறை நகர்மன்றத்தின் 06-10-2022 வியாழக்கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

## நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1) படியன்விளையில் இருந்து பழைய பாலம் செல்லும் சாலையை செப்பனிட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 273 தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 1

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனமான மார்த்தாண்டம் நவீன மீன் சந்தை துறை ரீதியாக வசூல் செய்யப்பட்டு வருவதால் வசூல் செய்வதற்கான இரசீது புத்தகங்கள் மற்றும் MDR REGISTER 10 எண்ணம் அச்சடித்த வகைக்கு கன்யா பிரிண்டிங் அச்சகம், படந்தாலுமூடு என்ற நிறுவனத்திடமிருந்து ரூ.46,000/-க்கான செலவினப்பட்டியல் பெறப்பட்டுள்ளது. அத்தொகையினை அந்நிறுவனத்திற்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு - மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண். 3066/2022/அ2

மன்றத்தீர்மான எண். 274 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 2

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களுக்கு 23 9 2022 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரியதில் ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை கீழ்கண்டவாறு ஒப்பந்தப் புள்ளிகள் மட்டுமே வரப்பெற்றன.

1. மார்த்தாண்டம் பேருந்து நிலையம் கடையின் A 3

| பினோ ரூபன் ஆற்றூர் | ஏலவைப்புத்தொகை ரூ 50000/- | மாதவாடகை ரூ5000/- |
|---|---|---|
| ஆர் எட்வின் ராஜேஷ் கண்ணங்கரை வியனூர் | ரூ 50000/- | ரூ 5050/- |

2.மார்த்தாண்டம் பேருந்து நிலையம் கடை எண்A4

| | | |
|---|---|---|
| பினோ ரூபன் ஆற்றூர் | ஏலவைப்புத்தொகை ரூ 50000/- | மாத வாடகை ரூ 5000/- |
| ஆர் எட்வின் ராஜேஷ் கண்ணங்கரை வீயனூர் | ரூ 50000/- | ரூ 5050/- |

மார்த்தாண்டம் கருங்கல் சாலை கடை எண் 39

| | | |
|---|---|---|
| காட்வின் பெஸ்டி, மார்த்தாண்டம் | ஏலவைப்புத்தொகை ரூ 50000/- | மாத வாடகை ரூ 6000/- |

P.P.M வணிக வளாக கடை எண் F6

| | | |
|---|---|---|
| சுனுகுமாரன், தொலையாவட்டம் | ஏலவைப்புத்தொகை ரூ 50000/- | மாத வாடகை ரூ 4000/- |

P.P.M வணிக வளாக கடை எண் F7

| | | |
|---|---|---|
| சுனுகுமாரன், தொலையாவட்டம் | ஏலவைப்புத்தொகை ரூ 50000/- | மாத வாடகை ரூ 4000/- |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்த புள்ளிகள் குறித்து ஒப்புதல் வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது

அ.கு:- i) மார்த்தாண்டம் பேருந்து நிலைய கடைகளான A3 மற்றும் A4 கடைகள் சுமார் மூன்று ஆண்டுகளுக்கு மேலாக ஏலம் போகாமல் உள்ளதாலும் நிதி இழப்பினை தவிர்க்கும் பொருட்டும். ஒப்புதல் வழங்கலாம்

ii) மார்த்தாண்டம் கருங்கல் சாலை கடைஎண் 39 சென்ற வருடம் ரூபாய் 5000/- ஆயிரத்துக்கு ஏலம் விடப்பட்டுள்ளது தற்சமயம் கூடுதலாக ஏலம் கேட்கப்பட்டுள்ளதால் ஒப்புதல் வழங்கலாம்

iii) பி.பி முனுசாமி வணிக வளாக கடைகளான F6 ,F7 கடைகள் சுமார் 4 ஆண்டுகளுக்கு மேலாக ஏலம் போகாமல் உள்ளதால் நிதி இழப்பினை தவிர்க்கும் பொருட்டு ஒப்புதல் வழங்கலாம்

ந.க.எண். 3066/2022/அ2

மன்றத்தீர்மான எண். 275 ஒப்புக்கொள்ளப்பட்டது

பொருள் எண்.3

அரசாணை நிலை எண்.52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 31-03-2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/R1, நாள் 01-04-2022 படி குழித்துறை நகராட்சி பகுதியில் சொத்துவரி பொது சீராய்வு செய்ய 11-04-2022 அன்று நகர்மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டது. வரிசீராய்வு தொடர்பாக அரசின் மறு பரிசீலனைக்கு மன்றம் முடிவு செய்து தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில் அரசு கூடுதல் தலைமை செயலர், சென்னை அவர்களின் கடிதம் எண்.9237/ந.நி/4(1/2022/1) நாள் 12-07-2022-ல் கேட்டுகொண்டதற்கிணங்க தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகராட்சிகளிலும் பொது சீராய்வு அமல்படுத்தப்பட்டுள்ளது. நகராட்சி நிதி நிலையினை அனுசரித்தும், அரசிடமிருந்து மானியங்கள் பெறுவதற்கு அடிப்படை காரணியாக சொத்துவரி செயல்படுவதாலும் இந்நகராட்சியில் 01.04.2022 முதல் சொத்துவரி சீராய்வினை அமல்படுத்த மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:-நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.40032/2012/R1, நாள் 01-04-2022 ம் தேதிய சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள வழிகாட்டுதல்களின்படியும் நகர்மன்ற தீர்மான 11-04-2022- தேதிய தீர்மான எண்.56 ல் குறிப்பிட்டுள்ள விபரப்படி (மன்றப்பொருள்) உள்ள காரணிகளின் அடிப்படையிலும் 01.04.2022 முதல் சொத்துவரி பொது சீராய்வினை அமல்படுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.969/2022/அ1.

மன்றத்தீர்மான எண். 276 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.4

தூய்மை இந்திய திட்டம் 2.0 கீழ் மூன்றாவது மாநில உயர்மட்ட குழு கூட்டத்தின் 27-6-2022 நாளிட்ட நடவடிக்கைகளின் படி 2022-2023 ஆம் ஆண்டுக்கு குழித்துறை நகராட்சியில் பொது கழிப்பிடம் கட்டும் பணிக்கு ரூபாய் 30 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்த புள்ளி கோர ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்ட வகைக்கு மாலை தமிழகம்

நாளிதழிடமிருந்து பட்டியல் தொகை ரூபாய் 25704/- வரப்பெற்றுள்ளது மேற்படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்
**ந.க.எண்.**3195/2022/இ1

மன்றத்தீர்மான எண். 277 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.5</u>

குழித்துறை நகராட்சி ஓராண்டு சாதனை திட்டப்பணிகள் குறித்து மாவட்ட அளவில் தினசரி செய்தி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்ட வகைக்கு கீழ்க்கண்ட விவரப்படி பட்டியல் தொகை வரப் பெற்றுள்ளது

1) EVENING TAMILNADU 14490.00/-
2) KAL PUBLICATION P.VT LTD 9975.00/-

மேற்கண்டவாறு வரப்பட்டுள்ள பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்
**ந.க.எண்.**1379/2019/இ1

மன்றத்தீர்மான எண். 278 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.6</u>

குழித்துறை நகராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதற்கு என தாலுகா வளாகத்தில் மண் பரிசோதனை செய்யப்பட்ட வகையில் பட்டியல் தொகை ரூபாய் 21240/- அரசு பொறியல் கல்லூரி திருநெல்வேலி-7 இடமிருந்து வரப்பெற்றுள்ளது மேற்படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு

அ.கு.:-திட்டப்பணியாக இருப்பதினாலும் பணியின் அவசர மற்றும் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன்அனுமதி பெற்று பட்டியல் தொகை ரூபாய் 21240/- அரசு பொறியியல் கல்லூரி திருநெல்வேலிக்கு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்
**ந.க.எண்.**43/2022/இ1

மன்றத்தீர்மான எண். 279 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.7</u>

குழித்துறை நகராட்சி அலுவலக வளாகத்தில் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு என மண் பரிசோதனை செய்யப்பட்ட வகைக்கு பட்டியல் தொகை ரூபாய் 21240/- அரசு பொறியல் கல்லூரி திருநெல்வேலி-7 இடமிருந்து வரப்பெற்றுள்ளது மேற்படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு

அ.கு.)- நகர்மன்ற தலைவர் முன்அனுமதி பெற்று பட்டியல் தொகை ரூபாய் 21240/- அரசு பொறியியல் கல்லூரி திருநெல்வேலிக்கு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.3017/2022/இ1

மன்றத்தீர்மான எண். 280 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.8</u>

குழித்துறை நகராட்சியின் எல்கையில் உள்ள பாகோடு பகுதியில் சர்வே எண் 307/2 இடத்தில் புதியதாக நவீன எரிவாயு தகன மேடை அமைக்க மேற்கண்ட இடத்தின் மண் பரிசோதனை செய்யப்பட்ட வகைக்கு பட்டியல் தொகை ரூபாய் 21240/- அரசு பொறியல் கல்லூரி திருநெல்வேலி-7 இடமிருந்து வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.)- நகர்மன்ற தலைவர் முன்அனுமதி பெற்று பட்டியல் தொகை ரூபாய் 21240/- அரசு பொறியியல் கல்லூரி திருநெல்வேலிக்கு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.3018/2022/இ1

மன்றத்தீர்மான எண். 281 அனுமதிக்கப்பட்டது.

ஒப்பம்/-திரு.பொன்.ஆசைத்தம்பி,
நகர் மன்ற தலைவர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.